# ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவை அமைப்பானது,

# சர்ச்வில் பகுதி வெள்ளத்திற்கான செவிசாய்ப்பினை, மீட்சிக்கான முயற்சிகளாக மாற்றியமைக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 23, 2022) – இன்றைய தினம், சர்ச்வில் பகுதி வெள்ளத்தை எதிர்கொள்வதற்கான அவசரகால செவிசாய்ப்பு மற்றும் அதற்கான இயக்க செயல்பாடுகளை இனிமேற்கொண்டு செய்யப்படவிருக்கும் மீட்பு நடவடிக்கைக்கான முயற்சியாக, ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவை அமைப்பின் குறித்த நிகழ்வுக்கான தளபதியாகிய தீயணைப்பு தலைவர் பில் போயஸ் அவர்கள் மாற்றியமைத்தார்.

இன்றைய தினம் சர்ச்வில் பகுதி குடியிருப்புவாசிகள் தங்கள் வீடுகளுக்கு திரும்பி வர இயன்றது.

நகரின் பொதுப்பணிகள் மற்றும் பொறியியல் துறை அணியும், ப்ராம்ப்ட்டன் அவசரகால மேலாண்மை அலுவலகமும் சேர்ந்து மீட்பு நடவடிக்கைகளில் இறங்குவார்கள்; இதில் பனி அகற்றுதல், தூய்மை செய்வதற்கான முயற்சிகள் மற்றும் அத்தியாவசியமான பயன்பாட்டு சேவைகளை உள்ளூர் குடியிருப்புவாசிகளுக்கு வழங்குவது ஆகிய எல்லாமே அடங்கும்.

சர்ச்வில் பகுதி வாகனப் போக்குவரத்துக்கு மூடப்பட்டே இருக்கும் மற்றும் கிரெடிட்வியூ சாலை உள்ளூர்ப் போக்குவரத்துக்காக மட்டுமே திறக்கப்படும். இந்தச் சமயத்தில் சர்ச்வில் பார்க் சவுத் மூடப்பட்டே இருக்கும் மற்றும் இந்தப் பகுதிக்கான மீட்புதிட்டத்தில் நகரின் பூங்கா பணியாளர்கள் கிரெடிட் வேல்லி கன்சர்வேஷன் அமைப்புடன் நெருக்கமாக பணியாற்றுவார்கள். சேதமடைந்த சாலைப்பகுதிகள் மற்றும் சாலை ஓரங்கள் ஏதும் செப்பனிடத் தேவையிருப்பின் அது கோடக்கால மாதங்களில் மேற்கொள்ளப்படும்.

வரவிருக்கும் மாதங்களில் மழைக்கான வாய்ப்பு பற்றிய முன்னறிவிப்பு ஏதும் செய்யப்படவில்லை என்றாலும் காலநிலைகள் மாறக்கூடும். மாறிவரும் கால நிலை மாற்றங்கள் மற்றும் இவை தொடர்பான தங்கள் சொத்துக்களின் மீதான தாக்கங்களை கண்காணித்துக்கொள்ளுமாறு குடியிருப்புவாசிகள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

பேரழிவுக்கான மாகாண உதவிக்குழுவானது சம்பவ இடத்திற்கு நாளை வந்திருந்து, ஒன்ட்டாரியோ மக்கள் பேரழிவிலிருந்து மீட்சியடைவதற்கான திட்ட நிகழ்ச்சி மூலமாக சாத்தியமான நிதியுதவிக்கு மதிப்பீடு செய்வார்கள்.

அவரவர் வகையில் இந்த இக்கட்டான அவசர காலத்தில் காட்டிய கடமையுணர்வுக்காக பீல் பிராந்தியம்,

பீல் பிராந்திய போலீஸ், கிரெடிட் வேல்லி கன்சர்வேஷன், மின்சார பாதுகாப்பு ஆணையம், என்ப்ரிட்ஜ், அலெக்ட்ரா, மற்றும் நமது சமுதாய கூட்டாளிகளான குளோபல் மெடிக் மற்றும் கால்ஸா எய்ட் அமைப்பு, மற்றும் உதவி புரிந்த ஒப்பந்ததாரர்கள் ஆகியோருக்கு ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பல கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca